சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி, போடிநாயக்கனூர்

A

# முதல் பருவத் தேர்வு – 2023

# தொகுத்தறி மதிப்பீடு – தமிழ்

**வகுப்பு – 7**

**கால அளவு : 2 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 60**

## பகுதி – 1

**I. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.** 4x1 = 4

1. நெறி' என்னும் சொல்லின் பொருள்.

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2. வாய்மை எனப்படுவது ______________________.

அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்
இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்

3. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர்

அ) ராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி

4. தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று

அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 4x1 = 4

5. யானைக் கூட்டத்திற்கு ஒரு ________________ யானைதான் தலைமை தாங்கும்.

6. 'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________.

அ) பொரு + செல்வம் ஆ) பொருட் + செல்வம்
இ) பொருள் + செல்வம் ஈ) பொரும் + செல்வம்

7. ________________ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.

அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்

இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன்

8. 'சமையல்' இச்சொல்லில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு________________

## பகுதி – 2

**III. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 7x2 = 14

9. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.

அ) பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து________________

ஆ) பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு ________________

10. கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.

வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்.

11. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

அ) மகளிர் x __________ ஆ) சிறுவன் x __________

இ) அரசன் x __________ ஈ) தோழி x __________

12. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.

வாழை, பாட்டு, சோறு, போட்டி, கூடு, பழம், குருவி, தயிர்

13. கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.

1. திருக்குறளில் __________ அதிகாரங்கள் உள்ளன.

2. இந்தியா __________ ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

14. கலைச்சொல் தருக.

அ) Elocution ஆ) Parable

15. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க.

| | | | |
|---|---|---|---|
| பொருட்செல்வம் | பூரியார் | செல்வத்துள் | செல்வம் |
| கண்ணும் | அருட்செல்வம் | உள | |

___________________________________

___________________________________

## பகுதி–3

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5x2 = 10**

16. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.

17. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?

18. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

19. வாழும் நெறியாகத் திருவள்ளுவர் கூறுவது யாது?

20. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

21. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டி இராஜாஜி கூறியது யாது?

22. 'பண்புள்ள விலங்கு' என்று புலி அழைக்கப்படுவதன் காரணம் யாது?

## பகுதி – 4

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2x4 = 8**

23. 'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.

24. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கினை விளக்குக.

25. நாட்டிற்கு உழைத்த சிறந்த தலைவர்கள் குறித்த செய்திகளை எழுதுக.

## பகுதி – 5

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 4x2 = 8**

26. குற்றியலுகரம் என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

27. மகரக்குறுக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

28. இயல்பு வழக்கின் வகைகள் யாவை?

29. 'வாழைப்பழம் மிகவும் நஞ்சுவிட்டது' – இத்தொடரில் அமைந்துள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.

## பகுதி – 6

**VII. அடிபிறழாமல் எழுதுக.** **2x4 = 6**

30. அ) 'அரசு' என முடியும் திருக்குறள்.

ஆ) 'அருள்நெறி' எனத் தொடங்கும் 'எங்கள் தமிழ்' பாடலின் முதல் நான்கு அடிகள்.

## பகுதி – 7

**VIII. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விரிவான விடையளிக்க.** **1x6 = 6**

31. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

32. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

33. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக்கொண்டு கட்டுரை வரைக.

**தாய்மொழிப் பற்று**

(முன்னுரை – மொழி பற்றிய விளக்கம் – தாய்மொழி – தாய்மொழிப் பற்று – தாய்மொழிப் பற்றுக்கொண்ட சான்றோர் – சாதுவன் வரலாறு – நமது கடமை – முடிவுரை)